# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2021

**19 வயதுப்பிரிவு**
(01.01.2002 – 31.12.2003 வரையில் பிறந்தோர்)

## தமிழீழம் எங்கள் தாயகம்

இந்து மாகடலின் நடுவில் அமைந்திருக்கும் சிறிய தீவு ஈழம். வரலாற்றுக் காலம் முதல் இங்கு தமிழ் இனத்தின் மூதாதையர்

தனித்துவமான மொழி, கலை, பண்பாட்டு அடையாளங்களுடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை, ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் கிடைக்கும் சான்றுகள் உறுதிசெய்துள்ளன. இவ்வாறு ஈழம் முழுவதையும் தமது தாயகமாகக் கொண்டு வாழ்ந்த தமிழினம், காலப்போக்கில் ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் செறிவாக வாழத்தொடங்கினர்.

ஐரோப்பியரான போர்த்துக்கேயர் ஈழத்திற்கு வந்த போது ஈழத்தில் யாழ்ப்பாண அரசு, கண்டி அரசு, கோட்டை அரசு ஆகிய மூன்று அரசுகளும் வன்னியரசுகளும் இருந்தன. இவற்றுள் கோட்டை அரசு மட்டுமே சிங்கள அரசாக இருந்தது. ஏனையவை தமிழரசுகளே!

1799 இல் பிரித்தானிய அரசுக்கு ஈழத்தைப் பற்றி எழுதிய அறிக்கையிலே "தமிழர் ஈழத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைத் தமது தாயகமாகக் கொண்டு வாழ்கின்றனர்" என்று சார் காக் கிளெகோர்ன் என்பவர் குறிப்பிட்டுள்ளார். ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் தமிழர் தாயகம் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

பிரித்தானியர் ஈழத்தை ஆட்சிசெய்த காலத்தில் கொண்டுவரப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் ஈழத்தின் ஆட்சியதிகாரம் படிப்படியாகச் சிங்களவரிடம் செல்ல வழிவகுத்தது. 1948 இல் ஈழம் பிரித்தானியர் ஆட்சியிலிருந்து விடுபட்ட பின்னர் ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளரின் கொள்கைகள், அரசியல் சீர்திருத்தங்கள், கல்வி மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு என்பன பௌத்த சிங்கள மக்களின் நலன்களையே முன்னிலைப்படுத்தியிருந்தன. இவற்றை எதிர்த்துத் தமிழ்த்தலைமைகள் மேற்கொண்ட அறவழிப் போராட்டங்கள் ஆயுதவழியில் ஒடுக்கப்பட்டன. அத்தோடு, சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் முதலில் ஈழத்தின் தென்பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழர் மீது குறிவைத்து நடாத்தப்பட்டது. அவர்களின் சொத்துகள் சூறையாடப்பட்டு ஏதிலிகளாக ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு விரட்டப்பட்டனர்.

இதன் விளைவுகளால் 1976 மே 14 ஆம் நாள் தமிழ் அரசியல் தலைவர்களால் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் நடாத்தப்பட்ட மாநாட்டில் 'தமிழர்களுக்குத் தனித்தமிழீழம் தான் முடிவு' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர், ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகளை உள்ளடக்கிய தமிழர் தாயகமான தமிழீழத்தை மீட்டெடுப்பதற்கான விடுதலைப் போராட்டம் வீச்சுப்பெறத்தொடங்கியது. தொடக்கத்தில் பல்வேறு போராட்ட இயக்கங்கள் தோற்றம்பெற்றாலும், தமிழீழ இலட்சியத்தில் உறுதியாக நின்று, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைக் கட்டியெழுப்பி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நேர்த்தியாக முன்னெடுத்த தமிழீழத்

தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் தலைமையிலேயே தமிழீழ நடைமுறை அரசு நிறுவப்பட்டு இயங்கியது.

‘பிரித்தானியர் ஈழத்தை விட்டு வெளியேறும்போது தமிழரையும் சேர்த்து ஆளுகின்ற உரிமையைச் சிங்களவரிடம் கையளித்து, தானும் தனது குழுவும் தவறிழைத்து விட்டோம்’ என்பதை சோல்பரிப் பிரபு அவர்கள் 1963 ‘சிலோன் ஏ டிவைட்டெட் நேசன்’ என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். ‘2009 மே ஆயுதங்கள் மௌனிக்கப்படும் வரை தமிழீழத்தில் பெரும் இன அழிப்புப் போர் நடந்துகொண்டிருந்த காலத்தில் நடைபெற்ற மனிதப் பேரவலங்களைத் தடுக்கப் போதிய நடவடிக்கைகளை எடுக்காமல் ஐ.நா தவறிழைத்தது’ என்பதனை அவ்வமைப்பின் அப்போதைய செயலாளர் நாயகம் பாங்கி மூன் அவர்கள் 2016 செப்ரெம்பரில் ஒப்புக்கொண்டுள்ளார். இவைபோலவே, விடுதலைக்காய் அறந்தவறாது போராடிய ஓர் இனத்தின் விடுதலைப் போராட்டத்தைப் பல நாடுகள் துணைநின்று அழித்த வரலாற்றுத் தவறை அனைத்துலக நாடுகள் உணரும் காலம் விரைவில் வரும்.

பல நாடுகளின் துணையோடு எமது தாயகம் எம்மிடமிருந்து வன்பறிப்புச் செய்யப்பட்டதன் பின்னர், தமிழீழத்தின் வளங்கள் திட்டமிட்டவகையில் சூறையாடப்படுகின்றன. தமிழினத்தின் வரலாற்றுத் தொன்மங்களும் இன அடையாளங்களும் அழிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் வருகின்றன. தமிழ் இளையோர் குறிவைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்படுவதுடன் பண்பாட்டுச் சீர்கேடுகளுக்குள் வலிந்து திணிக்கப்படுகிறார்கள்.

உயிர் கொடுத்து வளர்த்த விடுதலைத் தீ பாதியில் அணைந்துவிடப் பார்த்திருத்தல் தகுமோ! போராட்டக் களம் நிலத்திலிருந்து புலத்திற்குக் கடத்தப்பட்டிருக்கிறது. பன்முக ஆற்றல்களுடன் வளர்ந்து நிற்கும் தமிழ் இளையோராகிய நாம், வரலாற்றுத் தெளிவுள்ளவர்களாக எம்மைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். பொய்யுரைகளையும் திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றுக் காட்சிப்படுத்தல்களையும் இனங்கண்டு எதிர்க்க வேண்டும்.

ஆயிரமாயிரமாய் உயிர் தந்த மாவீரர் தியாகங்கள் எமக்கு வலிமை தரும். தமிழீழம் தமிழரின் தொன்மையான மரபுவழித் தாயகம் என்பதையும் அதை ஆளுகின்ற உரிமை தமிழராகிய எமக்கே உரியது என்கின்ற உண்மையையும் அனைத்துலகம் எங்கும் ஓங்கி முரசறைவோம். “போராட்ட வடிவங்கள் மாறலாம். போராட்ட இலட்சியம் மாறாது” என்ற தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைகள் எம்மை வழிநடத்த, தமிழீழ இலட்சியம் நோக்கிய பயணத்தில் இணைந்து கொள்வோம். ஒன்றுபடுவோம். வென்று நிமிர்வோம்.

நன்றி,
வணக்கம்.